செ.வெ.எண்: 22/2017 நாள்: 09.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மதுபானம் மற்றும் கள்ளச்சாராயம் அருந்துவதினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தான விழிப்புணர்வு கலை பயணத்தை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று கொடியசைத்து துவக்கி வைத்து, பார்வையிட்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மதுபானம் மற்றும் கள்ளச்சாராயம் அருந்துவதினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தான விழிப்புணர்வு கலை பயணத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (09.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு சென்று மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்து, இந்த கலைக்குழுவினர் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், விளக்கிடவுள்ளார்கள். மதுவினால் நாட்டிற்கும், வீட்டிற்கும் கேடு விளைவிக்கும், உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டு, இருதயம் பலவீனமாக்கப்படும். கண் பார்வை, கை,கால் வலிப்பு, நரம்பு மண்டலத்தை தாக்கி, சோர்வடைய செய்யும். கல்லீரல் பாதிக்கப்பட்டு, மாரடைப்பு ஏற்படும், இதனால் திடீர் மரணமும் ஏற்படும். ஒரு மனிதனை நோயாளியாக ஆக்குவது மட்டுமல்லாமல், தற்கொலைக்கும் இது தூண்டப்படுகிறது. உற்றார், உறவினர்களிடத்தில் கெட்ட பெயர் ஏற்படும், அவர்களுடைய வெறுப்புக்கு ஆளாக்கப்படுகிறது, குடும்பத்தில் மனைவி மற்றும் மக்களிடத்தில் அவப்பெயர் ஏற்படுத்துவது மட்டுமில்லாது, குடும்பம் முன்னேற்றத்தையே பாதிக்கும். இதுபோன்ற பல தீமைகளிடமிருந்து மது அருந்தும் பொதுமக்கள் விடுபட்டு, நாமும் மது அருந்தாமல், மற்றவர்களை போன்று வாழ்வில் அனைத்து நிலைகளிலும் உயர்ந்து, முன்னேறிட வேண்டும் என இந்த நாளில் சூளுரைப்போம். இதன் மூலம் வீட்டிற்கும், நாட்டிற்கும் வளமை சேர்ப்போம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, உதவி ஆணையர் (கலால்) திரு. ஏ. காளிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.